**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8108538

1. District : Tiruppur
மாவட்டம்
PS: VBAC
காவல்நிலையம்
Year: 2023
ஆண்டு
FIR No.: 01/2023/AC/TPR
மு.த.அ. எண்
Date: 09.03.2023
நாள்

2. (i) Act சட்டம்: The PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: by the PC (Amendment) Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Act 2018 Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள்
Date from : 22.02.2023 நாள் முதல்
Date to : 1930 hrs நாள் வரை
Time Period : நேர அளவு
Time from : 08.03.2023 நேரம் முதல்
Time to : 17.30 hrs நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 09.03.2023
Time நேரம் : 09.00 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 09.03.2023
Time நேரம் : 09.00 hrs

4. Type of Information : Written/ Oral : Written tamil ~~[illegible]~~ BKms
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: At about 15 Km South West Mangalam, Tiruppur.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : முறைக் காவல் எண்
(b) Address : முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்
District : — மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : M. Gopalakrishnan குற்றமுறையிட்டவர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : P. Mohana Sundaram தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 42/2023 நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian நாட்டினம்
(e) Passport No. : — வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : — வழங்கப்பட்ட நாள்
Place of Issue : — வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : Garments Company தொழில்
(g) Address : Door No. 12/2A Ayyan Nagar Main Street, Parapalayam, Mangalam Road, Tiruppur. முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1) Tr. Ramamoorthi, Assistant Executive Engineer, PWD, Madurai
2) Tr. Kumar, Assistant

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டவரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
—

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) —

Separate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS.............................................. on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .......................... பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்கக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 09/03/23

[signature]

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
09.03.2023

Name: பெயர் K. Sasilekha
Rank: நிலை Inspector of Police
VSAC, Tiruppur
09.03.2023

GCP-240-34(Type-2) 90,000 Cps -21.3.16(HCL-12)p.2

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது. கனம் தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி, தலைமைக் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்பூர் அவர்கள் முன்பாக.

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்றஎண். 01/2023/AC/TPR வழக்கின் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி...

திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் K.சசிலேகா ஆகிய நான் 09.03.2023-ம் தேதி மாலை 09.00 மணியளவில் அலுவலகத்தில் ஆஜரில் இருந்த போது திரு.M.கோபாலகிருஷ்ணன், த/பெ.P.மோகனசுந்தரம், கதவு எண், 12/2A, அய்யன்நகர் மெயின் வீதி, பாரப்பாளையம், மங்கலம்ரோடு, திருப்பூர். என்பவர் திருப்பூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் ஆஜராகி எழுத்து மூலமாக கொடுத்த புகாரின் விபரம் பின்வருமாறு அனுப்புநர் M.கோபாலகிருஷ்ணன், த/பெ.P.மோகனசுந்தரம், கதவு எண்.12/2A, அய்யன்நகர் மெயின் வீதி, பாரப்பாளையம், மங்கலம் ரோடு திருப்பூர். செல் நம்பர் 9843497846. பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருப்பூர். நான் திருப்பூர் மாவட்டம், மங்கலம்ரோடு, பாரப்பாளையம், கதவு எண் 12/2A, அய்யன்நகர் மெயின் வீதியில் வசித்து வருகிறேன். நான் கே.வி.ஆர் நகரில் GSD கார்மெண்ஸ் என்ற பெயரில் பனியன் கம்பெனி நடத்தி வருகிறேன். திருப்பூரைச் சேர்ந்த சுரேஷ்குமார் மற்றும் தமிழரசன் ஆகியோரிடமிருந்து திருப்பூர் மாவட்டம், திருப்பூர் கிராமம், பழைய க.ச.121/2, 121/3, சைட் நெ.41 - ல் 3020 சதுரடி பரப்பளவுள்ள இடமும், தரைதளத்தில் 2500 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி கட்டிடம் மற்றும் முதல்தளத்தில் 2500 சதுரடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ள ஆர்.சி.சி கட்டிடத்தை எனது பெயரிலும், எனது மனைவி சசிகலா பெயரிலும் ரூ.74,00,000/-க்கு வாங்க முடிவு செய்தேன். மேற்படி கட்டிடத்தின் மதிப்பு ரூ.48,00,000/- என்றும், இடத்தின் மதிப்பு ரூ.26,00,000/- என்றும் ரூ.74,00,000/-த்திற்கு திருப்பூர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எண் 5945/2022 நாள் 25.11.2022 தேதி எனது பெயரிலும், எனது மனைவி பெயரிலும் பதிவு செய்தேன். இதற்கு முத்திரை தீர்வை, பதிவு கட்டணம், கணினி கட்டணம், குறுந்தகடு கட்டணம் என ரூ.7,14,400/- கட்டினேன். மேற்படி இடத்தை வாங்குவதற்காகவும், தொழிலுக்காவும் கோயம்புத்தூரிலுள்ள டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் மூலம் ரூ.1,00,00,000/- கடன் வாங்கினேன். டிசம்பர் மாதத்தில்

திருப்பூர் 2 எண் இணை சார்பதிவாளர் அவர்கள் வீட்டை ஆய்வு செய்து சென்றார். கோயம்புத்தூரிலுள்ள டாடா கேபிடல் ஹவுசிங் பைனான்ஸிலிருந்து மேற்படி இடத்திற்கான அசல் ஆவணத்தை சார்பதிவாளர் அலுவலகத்திலிருந்து வாங்கி பைனான்சில் ஒப்படைக்குமாறு சொன்னார்கள். இதனையடுத்து நான் திருப்பூர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு கேட்ட போது உங்களது ஆவணத்தில் உள்ள கட்டிடத்தின் மதிப்பு ரூ.50,00,000/- மேல் இருப்பதால் பத்திர பதிவு துறையில் ரூ.50,00,000/-த்திற்கு மேல் பதிவு செய்யும் கட்டிடங்களை எங்கள் துறை சார்பாக மதுரையில் உள்ள பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ஆய்வு செய்து மதிப்பறிக்கை கொடுத்தால் தான் உங்களது ஆவணத்தை ரிலீஸ் செய்து கொடுப்பார்கள் என்றும், உங்களது ஆவணத்தை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு அனுப்பியுள்ளதாக சொன்னார்கள். 10.01.2023-ம் தேதி மாலை சுமார் 17.00 மணியளவில் குமார் என்பவர் அவரது செல்போன் எண் 9384676804-லிருந்து தொடர்பு கொண்டு தான் மதுரையில் உள்ள பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் ராமமூர்த்தி அவர்களின் உதவியாளர் என்றும் தாங்கள் 25.11.2022 தேதி திருப்பூர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்த கட்டிடத்துடன் கூடிய இடத்தினை ஆய்வு செய்து மதிப்பறிக்கை கொடுக்க வேண்டியது எங்களது வேலை என்றும் தங்களது கட்டிடத்தை பார்க்க உதவி செயற்பொறியாளர் ராமமூர்த்தி அவர்களுடன் திருப்பூர் வந்துள்ளதாகவும், இடத்திற்கு வர வேண்டிய வழி குறித்து கேட்டு தெரிந்து கொண்டார். மாலை 18.00 மணியளவில் உதவி செயற்பொறியாளர் ராமமூர்த்தி அவர்களுடன், குமார் மற்றும் இன்னொரு நபரும் கட்டிடத்தை பார்வையிட்டு அளந்தார்கள். அப்போது உதவி செயற்பொறியாளர் ராமமூர்த்தி அவர்கள் இந்த கட்டிடத்திற்கான ஆய்வறிக்கை சீக்கிரமாக வழங்க வேண்டுமானால் என்னை தனியாக கவனிக்க வேண்டும். மேற்படி விபரம் சம்பந்தமாக குமார் உங்களிடம் பேசுவார். குமாரிடம் விபரங்கள் சொல்லியுள்ளதாக கூறினார். 23.01.2023-ம் தேதி மாலை சுமார் 17.15 மணியளவில் குமார் எனது செல்போனுக்கு தொடர்பு கொண்டு உங்களது பில்டிங்க்கு இப்ப இருக்கிற மதிப்பு போடும்போது ரூ.3,20,000/- அதிகமாக வருகிறது. நீங்கள் அந்த பணத்தை கட்ட வேண்டியுள்ளது என்று சொன்னார். அதற்கு நான் கட்டிடத்திற்கும் இடத்துக்கும் சேர்த்து ரூ.74,00,000/- ஆவணம் பதிவு செய்துள்ளேன் என்று சொன்னேன். அதற்கு அவர் பில்டிங்கிற்கே அவ்வளவு மதிப்பு வருகிறது என்று சொன்னார். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும் என்று கேட்டேன். அதை நீங்கள் தான் சொல்ல வேண்டும் என்று சொல்லிவிட்டு

வைத்துவிட்டார். அதன்பின்னர் இரண்டு, மூன்று முறை என்னை அழைத்து பேசினார். 31.01.2023 தேதி மதியம் சுமார் 1 மணிக்கு குமார் என்னை தொடர்பு கொண்டு உங்களது டாக்குமெண்ட் ரைட்டரை என்னிடம் பேச சொல்லுங்கள் என்று கூறிவிட்டு போனை வைத்துவிட்டார். எனக்கு ஆவணம் தயார் செய்து தந்த சரவணபிரகாஷ் என்பவரிடம் இந்த விபரத்தை சொல்லி குமாரின் செல்போன் நம்பரை கொடுத்து பேச சொன்னேன். சரவணபிரகாஷ் 14.02.2023 தேதி மாலை சுமார் 4 மணிக்கு குமாரை தொடர்பு கொண்டு பேசிய போது தான் பிசியாக இருப்பதாகவும், 2 நாள் கழித்து கூப்பிட சொன்னதாக என்னிடம் சரவணபிரகாஷ் கூறினார். அதன்பின்னர் சரவணபிரகாஷ் 17.02.2023 தேதி மதியம் சுமார் 1 மணிக்கு குமாரை தொடர்பு கொண்டு பேசிய போது செவ்வாய்கிழமை தானே கூப்பிடுவதாக சொன்னதாக என்னிடம் சரவணபிரகாஷ் தெரிவித்தார். 21.02.2023 தேதி மாலை சுமார் 19.00 மணிக்கு குமார், சரவணபிரகாஷை தொடர்பு கொண்டு 22.02.2023 தேதி இரவு 8 மணிக்கு திருப்பூர் புஷ்பா தியேட்டர் அருகில் உள்ள பிருந்தாவன் ஹோட்டலுக்கு என்னை அழைத்து கொண்டு வருமாறும் அங்கு வைத்து நேரில் பேசிக் கொள்ளலாம் என்று சொன்னதாக சரவணபிரகாஷ் என்னிடம் சொன்னார். அவர் சொன்னபடி 22.02.2023 தேதி மாலை சுமார் 19.30 மணிக்கு நானும், சரவணபிரகாசும் பிருந்தாவன் ஹோட்டலுக்கு சென்றோம். சரவணபிரகாஷ் குமாரின் செல்போனுக்கு அழைத்து வந்துள்ள விபரத்தை கூறினார். சிறிதுநேரத்தில் குமார் ஹோட்டல் வரவேற்பறைக்கு வந்தார். அப்போது குமார் பில்டிங்கிற்கே ரூ.77,00,000/- மதிப்பு வருகிறது நீங்கள் கூடுதலாக பணம் ரூ.3,20,000/- கட்ட வேண்டியுள்ளது. அந்த ரிஸ்க்கான வேலையை செய்ய வேண்டியுள்ளதால் நீங்கள் அதற்கு பணம் ரூ.1,00,000/- தனியாக தர வேண்டும். நீங்கள் அந்த பணத்தை கட்டாத அளவுக்கு செய்து கொடுக்கிறோம் என்று சொன்னார். மதிப்பறிக்கையை தயார் செய்து உதவி செயற்பொறியாளர் கொடுப்பார். மதிப்பறிக்கையை கொடுத்த பின்னர் உங்களது பத்திரத்தை பத்திர அலுவலகத்திலிருந்து கொடுத்து விடுவார்கள் என்று சொன்னார். நான் பணத்தை குறைத்து கொள்ளுமாறு கேட்ட போது உங்களுக்கு ரூ.2,20,000/- கட்டாமல் பண்ணி கொடுக்கிறோம். அதனால் நீங்கள் ரூ.1,00,000/- விருந்து ரூ.25,000/- குறைத்து ரூ.75,000/- கொடுங்கள் என்று சொன்னார். உங்களுக்கு சீக்கிரமாக ஆர்டர் வேண்டுமென்றால் நீங்கள் அடுத்தவாரம் செவ்வாய் அல்லது புதன்கிழமை மதுரைக்கு வந்து வாங்கி கொள்ளுங்கள் என்று சொன்னார். அடுத்து திருப்பூர் வருவதற்கு 2 வாரங்கள் ஆகும் என்றும் வ்ருவதற்கு முன்பு தகவல் சொல்வதாகவும் சொன்னார்.

அப்போது நாங்கள் உதவி செயற்பொறியாளர் அவர்களை பார்க்க வேண்டும் என்று கேட்ட போது உதவி செயற்பொறியாளர் அவர்கள் சொன்ன விபரங்களை தான் உங்களிடம் சொல்லியிருப்பதாகவும் அவர் தான் ஆர்டரில் கையெழுத்து போடுவார் அவர் சார் அறையில் இருப்பதாகவும் கூறினார். இந்நிலையில் 08.03.2023-ம் தேதி மாலை சுமார் 5.30 மணிக்கு குமார் சரவணபிரகாஷ் செல்போனுக்கு தொடர்பு கொண்டு தான் ஏற்கெனவே சொன்ன பணத்தை ரெடி பண்ணி வையுங்கள் நாளை மதியம் திருப்பூர் மங்கலத்தில் உள்ள இடத்தை பார்வையிட வருவதாகவும் அங்கு வைத்து பணத்தை வாங்கி கொள்வதாகவும் திருப்பூர் வந்து அழைப்பதாக கூறியதாக என்னிடம் சரவணபிரகாஷ் சொன்னார். திருப்பூர் 2 எண் இணை சார்பதிவாளர் அலுவலகத்தில் 25.11.2022 தேதி பதிவு செய்த ஆவண எண்.5945/2022-க்கான கட்டிடத்தை மதிப்பீடு செய்து ஆர்டர் வழங்க பத்திர பதிவுதுறையின் சார்பாக மதுரையில் பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளராக பணிபுரியும் ராமமூர்த்தி அவர்களுக்காக அவரது உதவியாளர் குமார் என்பவர் ரூ.75,000/- லஞ்சமாக கேட்கும் பணம் கொடுக்க எனக்கு விருப்பமில்லை. எனவே அவர்கள் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/-xxxx M.Gopalakrishnan 09/03/23. Sir, Received the complaint on 09.03.2023 at 09.00 hrs and made preliminary verification between 09.00 hrs to 10.00 hrs and registered a case in Tiruppur V&AC Cr.No.1/2023/AC/TPR u/s 7 of PC Act 1988 as amended by 7 of PC (Amendment) Act 2018 on 09.03.2023 between 10.00 hrs to 11.00 hrs. Sd/-xxxx (K.Sasilekha). 09/03/2023 Inspr. V&AC, TPR.

Original FIR along with original written complaint of Tr.M.Gopalakrishnan,S/o.P.Mohanasundaram, Door.No.12/2A, Ayyannagar main street, Parapalayam, Mangalam road, Tiruppur is submitted to the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Chief Judicial Magistrate Court, Tiruppur and a copy of FIR is submitted to the Director, Vigilance and Anti-Corruption, Chennai.

(K.Sasilekha),
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Tiruppur. 09.03.2023